**பெல்மடுள்ள பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 19 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 07 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெல்மடுள்ள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியுடன் ஒப்பீடு செய்யும் போது கடன்கொடுத்தோர் கணக்கில் மற்றும் திரண்ட நிதிக் கணக்கில் ரூபா 90,080 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 118,149 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கின் ஊடாக மூலதனப்படுத்தியிருக்காமையால் ஆண்டிற்கான சொத்துக்கள் அத் தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்தல் அறிக்கையின் பிரகாரம் ரூபா 117,820 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பன ஏல விற்பனை செய்வதற்கு விதந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அச் சொத்துக்கள் ஏல விற்பனை செய்வதற்கு முன்னர் சொத்துக் கணக்குகளில் இருந்து பதிவளிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 10,667,461 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

(ஆ) 04 செலவு விடயங்கள் தொடர்பாக வாக்குப் படி பேரேட்டின் மீதிகள் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஒப்பீடு செய்யும் போது ரூபா 42,876 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய கணக்குகள்**

2015 மே 15 திகதி களைக்கப்பட்ட பிரதேச சபையின் அங்கத்தவர்களுக்கு 2015 மே மாதம் சபை அமர்வுப் படியாக ரூபா 300,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றில் அங்கத்தவர்களுக்கு உரித்துள்ள 15 நாட்களின் சம்பளமாக ரூபா 150,000 மாத்திரமே. இதன் பிரகாரம் ரூபா 150,000 தொகைக்கான நட்டமொன்று சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் சம்பள செலவு ரூபா 150,000 இனால் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பிரதேச சபையினால் மந்திரிமார்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 150,000 கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 371(2)(அ) மற்றும் (ஈ) | 2012, 2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக ரூபா 1,175,518 இற்கான முற்பணங்கள் தீர்க்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் 2015 மே மாதம் 03 வீதி நாடகக் குழு ஒன்றிற்கு இணைந்த படிகள் வழங்கியிருந்த ரூபா 24,430 இற்கான முற்பணம் 2015 அக்தோபர் 21 திகதி வரை முதலமைச்சினால் மீளளிப்புச் செய்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571 | காலங் கடந்த வைப்புக்களை ஆதனவளிப்புச் செய்ய வேண்டுமெனினும் ரூபா 874,811 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு செயலாளரின் PE/01/01 மற்றும் 2010 ஆகஸ்ட் 17 திகதிய சுற்றறிக்கை | கிராம புரங்களில் "A" தர பாதைகளில் வர்த்தக பிரதேசங்களில் மின்கம்பத்தில் உச்ச வோட் அளவு 110 அதி தாக்கமுடைய சோடியம் வோல்ட் விளக்குகள் போட முடியும். எனினும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் ரூபா 134,140 பெறுமதியுடைய 250 வோட் கிரேபோ வீதி விளக்கு 25 தொகுதிகள் பெற்று அவற்றில் 20 பொருத்தப்பட்டிருந்தது. மேலும் வீதி விளக்குகள் பொருத்துவதற்காக இலங்கை மின்சார சபையுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கத்தையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | சப்ரகமுவ மாகாண சபை மற்றும் முதலமைச்சரின் செயலாளரின் சுற்றறிக்கை இலக்கம் 01/2010 மற்றும் 2010 நவம்பர் 16 திகதிய சுற்றறிக்கை | அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அடிப்படையில் ஊழியர் எவரும் முதலமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறாமல் சேர்க்கப்படக் கூடாது என குறிப்பிட்டிருந்த போதிலும் முதலமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் 23 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 5,395,358 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,742,653 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகை ரூபா 1,347,295 இனால் குறைந்திருந்ததுடன் அது முன்னைய ஆண்டை விட 20 சதவீதத்திற்காக குறைவு ஒன்று என அவதானிக்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் வருமானத்தில் குறைவடைதல் மற்றும் மீண்டுவரும் செலவுகளில் அதிகரித்தல் முக்கியமாக பாதித்துள்ளது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 7,545 | 7,491 | 10,020 |
| வாடகை | 1,929 | 1,827 | 1,642 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 388 | 519 | 21 |
| ஏனைய வருமானங்கள் | 56,230 | 39,524 | 14,357 |

#### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது வீதவரி, வாடகை, சேவைக்கான கட்டணம், எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டப் பணமும் ஏனைய வருமானங்கள் மற்றும் அரசாங்க பங்களிப்பு ஆகிய வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீட்டு தொகையை விட முறையே 22 சதவீதம், 04 சதவீதம், 16 சதவீதம், 34 சதவீதம், 50 சதவீதம் மற்றும் 38 சதவீதத்திற்காக குறைவடைதல் காட்டப்பட்டது.

### 2.3.3 வீத வரி

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 2015 செப்தெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,000 இனை விட மிகையான வீதவரி வருமானம் ரூபா 1,867,646 தொகை காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 7,000 இனை விட மிகையான நிலுவை காணப்படும் வீத வரி செலுத்துவோர் 60 பேரிடம் ரூபா 706,508 இற்கான மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

### 2.3.4 வாடகை

சபைக்குச் சொந்தமான கடைகளில் இருந்து பாதையை விரிவாக்கல் நகர அபிவிருத்தி போன்ற காரணங்களினால் உடைத்து அகற்றப்பட்டு பின்னர் மீதியாகவுள்ள 11, 12 மற்றும் 13 ஆம் இலக்க மூன்று கடைகளை கடந்த வருடம் வாடகைக்கு பெற்றிருந்த வாடகையாளருக்கே வழங்கியிருந்த போதிலும் உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. சபையின் இலக்கம் 04, 01, 12A, 13 கொண்ட கடைகள் தொடர்பாக ரூபா 161,709 இற்கான வாடகை வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.5 ஏனைய வருமானங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஏக்கர் வரி மெய்மையாய்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு பதிவேடுகள் நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 300 இனை விட மிகையான 71 நிலுவை ஏக்கர் வரி அலகுகளில் இருந்து ரூபா 66,373 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) வியாபார வரி, கைத்தொழில் வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் தொடர்பாக வியாபாரக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வர்த்தக நிறுவனங்கள், கைத்தொழில் நிலையங்கள், விற்பனை நிலையங்கள் தொடர்பாக இனங்காணப்படாமல் மேற்கூறிய வரி மற்றும் கட்டணமாக அறவிடப்படும் பெறுமதி மாத்திரம் ஆவணப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தல் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் காட்சிப்படுத்தல், அறிவித்தல் பலகை நிறுவனங்கள் 19 இல் இருந்து ரூபா 143,350 தொகையொன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் சபையில் இருந்து முறையான அங்கீகாரம் பெறாமல் மிகவும் பெரிய அளவினைக் கொண்ட 04 பெனர்கள் காட்சிப்படுத்தப்பட்டு காணப்பட்டது.

(ஈ) பெல்மடுள்ள வாராந்த சந்தை தொடர்பாக 2015 அக்தோபர் 17 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த வாராந்த சந்தை கணிப்பீட்டின் பிரகாரம் நிரந்தர வர்த்தகர்கள் மற்றும் பாதையின் இரு மருங்கிலும் 186 வியாபாரிகள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்ததெனவும், அத் திகதியில் வருமானம் ரூபா 18,060 தொகை எனக் குறிப்பிட்ட போதிலும் வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர்கள் அறிவித்தவாறு 2015 ஜனவரி முதல் அக்தோபர் 10 திகதி வரை சந்தை வாடகை வருமானம் ரூபா 11,000 முதல் ரூபா 16,000 தொகை இடைப்பட்ட வருமானம் ஒன்றினை சேகரித்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2014 ஆகஸ்ட் முதல் முத்திரைக் கட்டணம் கிடைத்திருக்கவில்லை. அத்துடன் நீதிமன்றத் தண்டப்பணம் என பெல்மடுள்ள நீதிமன்றில் இருந்து 2014 அக்தோபர் மாதத்தின் பின்னரும்

இரத்தினபுரி நீதிமன்றில் இருந்து 2014 ஜனவரி மாதத்தின் பின்னரும் வருமானத்தை தருவித்துக்கொள்வதற்காக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) 2011 திசெம்பர் முதல் 2013 திசெம்பர் வரை பொதுச் சந்தையின் மாட்டிறைச்சிக் கடையின் நிலுவை நீர் பில்பத்திரங்களுக்காக பணம் வாடகையாளரிடம் அறவீடு செய்தல் அல்லது பிணைப் பணத்தில் இருந்து பதிலீடு செய்வதற்கு இயலுமாக இருந்தும் கூட அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் குறிப்பிட்ட பில்பத்திரத்திற்காக 2015 ஜூலை 17 திகதி சபை நிதியத்திலிருந்து ரூபா 83,375 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இந்த இடத்திற்கு தனியாக நீர்மானி ஒன்று பொருத்துவதற்கு வாய்ப்பு இருந்தும் கூட இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக தவணைப் பணம் மாதாந்தம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என அறவித்திருந்த போதிலும் சபையினால் 2010 ஆகஸ்ட் மாதம் முதல் இப் பணம் செலுத்துவதை புறக்கணித்தமையால் 2015 மே 31 திகதி அளவில் ரூபா 3,764,210 இற்கான நிலுவைத் தொகையொன்றினை செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

(இ) மாரபன உப அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தினால் வங்கியில் வைப்புச் செய்யப்படாத முறையே ரூபா 8,915 தொகை மற்றும் ரூபா 517,447 பணம் மற்றும் காசோலைகள் மற்றும் 2003 ஆண்டு முதல் தேறப்படாத ரூபா 109,562 தொகையான காசோலைகள் மற்றும் கண்டுபிடிக்க முடியாது என வங்கி இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 259,296 தொடர்பாக வங்கி இணக்கக் கூற்றில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக சபைக்கு இயலாதிருந்தது.

(ஈ) ஊழியர் பிணை பதிவேட்டின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ள 22 உத்தியோகத்தர்களிடம் ரூபா 160,150 தொகை அறவீடு செய்வதற்கு முடியாது காணப்பட்டது.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆண்டு முதல் அறவீடு செய்யப்பட்ட ரூபா 40,681 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரி மாதாந்தம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டுமெனினும், அப் பணத்தை பலவின வைப்புக்கள் கணக்கில் தடுத்துவைத்திருந்தது.

(ஆ) சபையில் சேவையாற்றிய ஓய்வு பெற்றிருந்த மற்றும் இடமாற்றம் பெற்றிருந்த 04 பதவியணினர்களுக்கு விடுவிக்கப்பட வேண்டியிருந்த ரூபா. 12,098 தொகைக்கான ஊழியர் பிணையினை விடுவிக்காமல் தொடர்ந்து சபையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தது.

(இ) கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் கடன் கொடுத்தோருக்கு பணம் செலுத்தாமை அல்லது பதிவேடுகள் பேணப்படாமையின் காரணமாக முன்னைய ஆண்டுகள் தொடர்பாக ரூபா 693,447 தொகையான மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் பாதீட்டின் மூலம் 16 நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்காக திட்டமிட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக வேறு 12 நிர்மாண வேலைகள் அமுல் நடத்தப்பட்டிருந்தது.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊருக்கு ஊர் வீட்டுக்கு வீடு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 27 நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக ரூபா 15,063,154 தொகையொன்று உரிய ஒப்பந்தக்காரர்கள் செலுத்த வேண்டியிருந்தது. குறிப்பிட்ட செயற்திட்டத்தின் கீழ் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நாரங்கொட நிதங்கல போதி விஹாரைக்கு அண்மையில் சிறு பாலம் ஒன்றின் நிர்மாண வேலைகள் பயன்தரக் கூடிய விதமாக அமைந்திருக்கவில்லை. அத்துடன் அதற்காக செலவிடப்பட்ட செலவு விளைவற்ற செலவு ஒன்றென அவதானிக்கப்பட்டது.

### 3.4 வாகனக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான இலக்கம் SG PD-7614 மற்றும் SG LF-4824 கொண்ட இரண்டு கப் வண்டிகளிலும் நீண்ட காலமாக மைலோ மீட்டர்கள் செயற்படாமல் காணப்படுகின்றன என குறிப்பிட்டு சாரதிகள் சுய மதிப்பீட்டின் பிரகாரம் எரிபொருள் சமநிலைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறிப்பிட்ட பழுதுபார்த்தல் வேலையை செய்வதற்காக எதுவித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கப் வண்டிகள் மொத்த எரிபொருள் கொள்ளளவு தொகை என்ன என தெளிவாக உறுதிப்படுத்தப்படாமல் எரிபொருள் கொள்வனவு செய்திருந்தது. இதன் பிரகாரம் ஓட்ட அட்டவணைகளில் எரிபொருள் சமநிலைப்படுத்தும் செயற்பாடு தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தி அடைய முடியாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 549,120 தொகை பெறுமதியான 5677 லீற்றர்கள் எரிபொருள் கொள்வனவு செய்திருந்தது.

(ஆ) 49-8876 ஆம் இலக்க டிரக்டர் வண்டி பழுதுபார்த்தலுக்காக 2014 அக்தோபர் 08 திகதி இயந்திரோபகரணங்கள் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2015 அக்தோபர் 22 திகதி வரை குறிப்பிட்ட பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பதிவு இலக்கம் RD 5932 கொண்ட டிரக்டர் வண்டி குப்பை கிடங்கில் புரண்டு விபத்து ஒன்று ஏற்பட்டிருந்ததுடன் அந்த விபத்தின் மூலம் டிரக்டர் வண்டிக்கு ஏற்பட்டிருந்த சேதத்தை பழுதுபார்ப்பதற்கு மதிப்பீடு ரூபா 261,825 தொகையெனினும் காப்புறுதி கம்பனியில் இருந்து நட்டஈடு என இணங்கியிருந்த தொகை ரூபா 197,993 மாத்திரமே. இதனை ரூபா 63,832 இற்கான நட்டமொன்று சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த ஆபத்து என அவதானிக்கப்பட்டது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

இலக்கம் 53-5365 மற்றும் WP PF-7484 கொண்ட கப் வண்டிக்காக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து சபைக்கு உரித்தாக்கப்பட்ட டிபர் வண்டி என்பவற்றை சபைக்கு வழங்கிய நிறுவனங்களில் இருந்து சபையின் பேருக்கு மாற்றப்படுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் பதிவு இலக்கம்

53-5635 கொண்ட சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந் கப் வண்டி துருப்பிடித்த நிலையில் காணப்பட்டன. மேலும், டிபர் வண்டி விளைவற்றறு நிறுத்தப்பட்டு காணப்பட்டது.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 43 செலவு விடயங்கள் தொடர்பான ரூபா 1,555,500 தொகைகளின் மொத்த ஏற்பாடுகளும் ஒரு விடயத்திற்குப் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது செலவுத் தலைப்பு இலக்கம் 504 இன் கீழ் மற்றும் 609 இன் ரூபா 2,760,000 இற்கான நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 11,350 தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. மேலும், செலவு விடய இலக்கம் 609-1 இன் கீழ் நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 300,000 தொகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,250 தொகை பெறுமதியான 05 புத்தகங்கள் மாத்திரம் கொள்வனவு செய்திருந்தது. இதன் பிரகாரம் பாதிக்கப்பட்ட தொகையில் 0.4% தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தமையால் பாதீட்டு முகாமையில் பாரிய பலவீனமொன்று அவதானிக்கப்பட்டன.

(இ) மீளாய்வாண்டின் போது 04 சந்தர்ப்ங்களில் 21 செலவுத் தலைப்புகளில் 25 செலவுத் தலைப்புகளுக்கு ரூபா 7,994,500 இற்கான ஏற்பாடுகளை மாற்றியிருந்த போதிலும் அதற்காக சபை தீர்மானம் அல்லது குழு விதப்புரை பெற்றிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுத்தியிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு அதற்கு வசதிகள் வழங்கப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல் நடத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்